**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 73 of 2023

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | ஆனந்த் |
| Father's Name | : | முருகேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd **day of September** 2025.

**(1 ம் 2 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது சூலூரில் குடியிருந்து கொண்டு மெஷின் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 09.04.2022-ம் தேதி இரவு 9 மணி அளவில் சூலூர் பிரிவில் உள்ள கவுண்டர் மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு ரூமுக்கு செல்வதற்காக தென்னம்பாளையத்திலிருந்து சூலூர் பிரிவு நோக்கி வரும் சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்த பொழுது கருப்பு நிற பல்சர் பைக்கில் வந்த சுமார் 20 முதல் 25 வயதுக்குள் இருக்கும் இரண்டு நபர்கள் என்னிடம் வந்து என்னிடம் இருக்கும் பணம் மற்றும் பொருட்களை எடுக்குமாறு மிரட்டினார். இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த நபர் எனது பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்துக்கொண்டார். நான் நேரடியாக ரூமுக்கு சென்று விட்டேன். அன்றைய தினம் எனது தங்கை இறந்துவிட்டார். ஆகவே என்னால் உடனடியாக புகார் கொடுக்க இயலவில்லை.

2. பின்னர் 13.04.2022-ம் தேதி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் படி எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் என்னுடைய செல்போனை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்றேன். தற்பொழுது புகைப்படத்தில் உள்ள செல்போன் என்னுடையதுதான். புகைப்படத்துடன் கூடிய **CD அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள். TN 37 BD 1764 black colour pulsar பல்சர் வாகனத்தில் வந்து என்னிடம் இருந்த செல்போனை பறித்து சென்றார்கள். மேற்படி சமயம் இருட்டாக இருந்ததால் அவர்களின் முகத்தை என்னால் பார்க்க இயலவில்லை.

**<u>ஒன்று மற்றும் இரண்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் ஐடிஐ படித்துள்ளேன், சாந்தி கியர்சில் வேலை பார்த்து வருகிறேன். நான் வாரத்தில் மூன்று நாட்கள் கவுண்டர் மெஸ்சில் சாப்பிடுவேன். நான் தங்கி இருந்த அறைக்கும் நான் சாப்பிட்ட கவுண்டர் மெஸ்ஸிற்கும் சுமார் அரை கிலோமீட்டர் இருக்கும். கவுண்டர் மெஸ்ஸில் இருந்து சூலூர் காவல் நிலையம் சுமார் நான்கு முதல் ஐந்து கிலோ மீட்டர் இருக்கும்.நான் புகார் கொடுத்தபொழுது செல்போனின் நிறுவனத்தை குறிப்பிட்டு புகார் கொடுத்தேன். ஆனால் செல்போனின் நிறம் குறித்து குறிப்பிட்டு உள்ளேன் என எனக்கு ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த பொழுது நானும் என்னுடன் நான்கு நண்பர்களும் சென்றோம். புகாரை நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். புகாரில் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் புகார் கொடுத்ததற்கான தேதி, மாதம் மற்றும் வருடம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. நான் கவுண்டர் மெஷின் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது வேறு நபர்களும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் கவுண்டர் மெஸ்ஸிற்கும் சுமார் 100 முதல் 150 அடி இருக்கும் என்றால் சரிதான். கவுண்டர் மெஸ்ஸில் சாப்பிட்டுக் கொண்டிருந்த நபர்களை நான் உதவிக்காக அழைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 9 மணி போதிய வெளிச்சமும் இல்லை என்றால் சரிதான். அப்பொழுது மேற்படி நபர்களின் பெயர் மற்றும் அங்க அடையாளம் தெரியாததால் தான் இரண்டு நபர்கள் என குறிப்பிட்டு புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை நான் இருட்டாக இருந்ததால் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை பார்த்தேன்.

3. காவல் நிலையத்தில் என்னை வரவழைத்து மேற்படி எனது செல்போனை பறித்து சென்றவர்கள் இவர்கள்தான் என சொன்ன பிறகு தான் மேற்படி நபர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக மத்திய சிறைக்கு என்னை மாலை சுமார் 4 மணியளவில் போலீசார் அழைத்துச் சென்றார்கள். மொத்தம் எத்தனை நபர்கள் சிறைக்கு உள்ளே இருந்தார்கள் என்றால் பத்து நபர்கள் இருந்தார்கள். அதில் ஒருவரை நிறுத்தி அடையாளம்

காண்பிக்க சொன்னார்கள். போலீசார் அப்பொழுது உடன் யாரும் இல்லை. சிறை போலீசார் மட்டும் இருந்தார்கள். காவல் நிலையத்தில் எதிரிகளை எனக்கு அடையாளம் காண்பித்ததால் அவரை நான் சிறையில் அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரிவிக்காமல் இருந்திருந்தால் அவர்களை நான் சிறையில் அடையாளம் காட்டி இருக்க முடியாது என்றால் சரிதான்.

4. போலீசார் சொல்லித்தான் எதிரி மற்றும் எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வண்டி குறித்து தெரிந்து கொண்டேன் என்றும், எதிரிகள் நான் சொல்வது போல் என்னுடைய செல்போனை பறிக்க வில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்வது போல் என்னுடைய செல்போனை யாரும் பறித்துச் செல்லவில்லை என்றும் அவ்வாறு சென்று இருந்தால் நான் உதவிக்காக கவுண்டர் மெஸ்ஸில் இருந்தவர்களை அழைத்து இருப்பேன் என்றும் நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவம் நடைபெறாததால் தான் நான் யாருடைய உதவியையும் நாடவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.22 19:55:49 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**